# கம்மாபுரம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (கி. ஊ) அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை :- திரு. அ. இப்ராஹிம்.

ந. க. எண். சி1 / 1524 / 2019, நாள். . 02.2021.

பொருள் :- அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 – ஊராட்சி ஒன்றியம், கம்மாபுரம் – கார்குடல் ஊராட்சி – சர்வே எண்கள். 65, 66/1, 66/2, 66/3, 66/4, 66/5, 66/7; 67/1, 67/5, 67/6, 67/7, 67/8, 67/9, 67/10; 75/2, 75/3, 75/4, 75/5B, 75/6, 75/7, 75/8, 75/17, 75/18; 76/1, 76/2, 76/3, 76/4B, 76/5, 76/6 ஆகியவற்றில் 6.72 ஏக்கர் (அ) 292723.20 சதுர அடி பரப்பளவு கொண்ட மனையிடத்தில் அமைந்துள்ள குமரன் நகர் – அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தி தொழில் நுட்ப ஒப்புதல் பெறப்பட்டது – இறுதி அனுமதி வழங்கி உத்தரவிடல் – தொடர்பாக.

பார்வை :- 1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம் அவர்களின் செயல்முறை நடவடிக்கை ந. க. எண். 308 / 2018 / வி.ம, நாள். 20.09.2018.

2. அரசாணை எண். 78 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD(3)) துறை நாள். 04.05.2017.

3. அரசாணை எண். 172 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD(3)) துறை நாள். 13.10.2017.

4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை – 2 அவர்களின் செயல்முறை வழிகாட்டுதல் (Operational Guidelines) ந. க. எண். 13193 / 2017 / LA2, நாள். 30.10.2017, 31.10.2017 மற்றும் 07.11.2017.

5. கார்குடல் ஊராட்சி தீர்மான எண்.107, நாள்.16.02.2021.

=====+++++++====

## உத்தரவு

பார்வை 1–ல் காணும் விழுப்புரம் மண்டல நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் மூலம் மேற்படி மனைப்பிரிவிற்கு வரன்முறைப்படுத்திட நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு உள்ளாட்சி அமைப்பு மூலம் இறுதி ஒப்புதல் பெற்றுக்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனையினை வரன்முறைப்படுத்துதல் கட்டணமாக 15185 சதுர மீட்டருக்கு ரூ. 30.00/– வீதம் மொத்தம் ரூ. 4,55,550/– உரிய அரசு தலைப்பில் பாரத மாநில வங்கியில் செலுத்தப்பட்டு செலுத்துச்சீட்டு மனுதாரரால் சமர்பிக்கப்பட்டுள்ளது.

மனையினை வரன்முறைப்படுத்துதல் வளர்ச்சி கட்டணமாக 15185 சதுர மீட்டருக்கு ரூ. 25.00/– வீதம் மொத்தம் ரூ. 3,79,625/– (ரூபாய் மூன்று இலட்சத்து எழுபத்து

ஒன்பதாயிரத்து அறநூற்று இருபத்தைந்து மட்டும்) வங்கி வரைவோலையாக வட்டார வளர்ச்சி அலுவலர் (கி. ஊ) மனைப்பிரிவு கட்டணம் கணக்கிற்கு வரைவோலை எண். 239385, நாள். 25.01.2021 தொகை செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி மனையினை வரன்முறை செய்திட கார்குடல் ஊராட்சி தீர்மான எண்.107, நாள்.16.02.2021–ன் மூலம் கார்குடல் ஊராட்சி மன்ற தலைவரால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியம், கார்குடல் கிராமம் சர்வே எண்கள். 65, 66/1, 66/2, 66/3, 66/4, 66/5, 66/7; 67/1, 67/5, 67/6, 67/7, 67/8, 67/9, 67/10; 75/2, 75/3, 75/4, 75/5B, 75/6, 75/7, 75/8, 75/17, 75/18; 76/1, 76/2, 76/3, 76/4B, 76/5, 76/6 ஆகியவற்றில் 6.72 ஏக்கர் (அ) 292723.20 சதுர அடி பரப்பளவு கொண்ட மனையிடத்தில் அமைந்துள்ள குமரன் நகரில் உள்ள மனையினை விழுப்புரம் மண்டல நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் எண். 308 / 2018 / வி.ம, நாள். 20.09.2018–ல் வழங்கப்பட்ட தொழில் நுட்ப அனுமதி மற்றும் நிபந்தனைக்களுக்குட்பட்டு மனையை வரன்முறைப்படுத்தி இறுதி அனுமதி வழங்கி இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு வரைபடத்திலுள்ள மனைக்கு மட்டும் பொருந்தும் என தெரிவிக்கப்படுகிறது.

25/02/21

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி. ஊ),
கம்மாபுரம்.

இணைப்பு

1. வரைபடம்.
2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் விழுப்புரம் மண்டலம் அவர்களின் செயல்முறைகள் நடவடிக்கை எண். 308 / 2018 / வி.ம, நாள். 20.09.2018. வழங்கப்பட்ட ஒப்புதல் மற்றும் நிபந்தனைகள்.

<u>பெறுநர்</u>

திரு. கு. ரவி த/பெ குப்புசாமி,
எண். 43/2, மேட்டுத் தெரு,
சேத்தியாதோப்பு (ம) அஞ்சல்.
விருத்தாசலம் வட்டம்.
கடலூர் மாவட்டம்.

<u>நகல் :-</u>மாவட்ட ஆட்சித்தலைவர், கடலூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
<u>நகல் :-</u>உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), விருத்தாசலம் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
<u>நகல் :-</u>நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
<u>நகல் :-</u>மாவட்ட பதிவாளர், விருத்தாசலம் அவர்களுக்கு அனுப்பப்படுகிறது.
<u>நகல் :-</u> ஊராட்சி மன்ற தலைவர், கார்குடல் ஊராட்சி.